# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.02.2023 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

### பொருட்கள்

1. திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்கள், மாண்புமிகு மேயர், ஆணையாளர் ஆகியோர்களின் குடியிருப்புகள், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானம், திருநெல்வேலி மண்டலத்தில் சரக்கு வாகன முனையம் (Truck Terminal) ஆகிய இடங்களில் முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் மூலம் பணிபுரிந்து வரும் 21 பாதுகாவலர்களின் ஒப்பந்தக் காலம் 31.03.2023 ___வுடன் முடிவடைகிறது. அவர்களின் தற்போதைய ஊதிய விபரம்

| வ.எண். | பதவியின் பெயர் | பாதுகாவலர்களின் எண்ணிக்கை | மாத தொகை ரூ. (Rate of Wages) |
|---|---|---|---|
| 1. | பாதுகாவலர் | 21 | ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 21082 (சேவை கட்டணம் 8% & GST 18%) |

மேற்படி டெக்ஸ்கோ பணியாளர்களின் அவசியம் கருதி, 1.4.2023 முதல் 31.3.2024 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அவர்களை பணியில் ஈடுபடுத்திடவும், மேற்கண்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தொகை (Rate of Wages) வழங்கவும், மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 21 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 1.4.2023 முதல் 31.3.2024 வரை உள்ள ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும், அதற்கான செலவுகளுக்கும், அவ்வப்போது அரசால் உயர்த்தப்படும் தொகை, அகவிலைப்படியினால் ஏற்படும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

சி2/778/2023

**தீர்மானம் எண்: 231 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

2. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு NHA Associates ஒப்பந்தத்தாரரால் 27.01.2023ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | பணிகள் விபரம் | 5% RM தொகை (ரூ.) | மைய அலுவலக வைப்பு தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | BT @ Kumaran Nagar Main Road W-19 | 48,289 | Lapsed 2018-19 P.no.21 |
| 2 | BT Surface @ Thyagaraj Nagar South Cross street | 48,271 | Lapsed 2018-19 P.no.21 |
| 3 | BT Surface @ VIP Colony W-19 | 48,274 | Lapsed 2018-19 P.no.21 |
| 4 | S/F Of well Granet & Bharathiyapuram Anganwadi Toilet W-30 | 12,934 | Lapsed 2018-19 P.no.20 |
| 5 | BT @ NH Colony 10 th Main Road 97 th Cross street | 47,247 | Lapsed 2018-19 P.no.23 |
| 6 | S/F Of well Granel Wt-30 Alagaripuram Coming Hall | 24,128 | Lapsed 2018-19 P.no.20 |
| | மொத்தம் | 2,29,143 | |

**அலுவலக குறிப்பு**

மேற்படி தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி Retention Money தொகை ரூ.2,29,143/- மட்டும் NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

(Est.No. 86/2018-17)

**தீர்மானம் எண்: 232 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

3. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தத்தாரரால் முன்வைப்புத் தொகை மற்றும் பின்வைப்புத் தொகை

செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்தத்தாரர் திரு.S.சுடலைமுத்து அவர்களால் 29.04.2021ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| SI.No. | Name of the work | EMD(Rs) | FSD(Rs) | Register Details |
|---|---|---|---|---|
| 1 | வார்டு - 45 சுந்தர விநாயகர் கோயில் தெருவில் பழுதான சாலை சீரமைத்தல் | 8300 | 8300 | 2017-18 Vol I P.No.14 and 20 |
| 2 | வார்டு -47 KOP தெருவில் அமைந்துள்ள பேட்டை மாநகராட்சி சிவன் கோவில் வார்டு துவக்கப்பள்ளி கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | | 9000 | 2017-18 Vol-I P.No 19 |
| | மொத்தம் | 8,300 | 17,300 | 25,600 |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன் மற்றும் பின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூால் விதி 7(10) (i)(ii)ன்படி தொகை ரூ.25,600/- மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.சுடலைமுத்து அவர்களுக்கு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ம.எண்.200 /16-17)

**தீர்மானம் எண்: 233 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 16-க்கு உட்பட்ட அமிர்சாகிப் நகர் பகுதியில் தெருக்களில் மத்தியில் வாகனங்கள் செல்ல இயலாதவகையிலும் வாகனங்கள் விபத்துகளும் நிகழ்கின்றது. ஆகவே மேற்கண்ட பகுதியில் சாலையின் இடையூராக உள்ள இரண்டு மின்கம்பங்களை மாற்றி அமைக்கவும், அதற்கான மின்வாரிய செலவினம் ரூ.50,000-க்கு அனுமதியும், மின்வாரியம் மூலம் மாற்றி அமைக்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட அமிர்சாகிப் நகர் பகுதியில் சாலையின் மத்தியில் பொதுமக்களுக்கு இடையூராக உள்ள இரண்டு மின்கம்பங்களை மாற்றி அமைக்க ஆகும் செலவினம் ரூ.50,000-க்கும் மின்கம்பங்களைமின்வாரியம் மூலம் மாற்றி அமைக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 234 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

5. திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, முதல் நிலை சேகரமாக குப்பைகளை கையாளுவதற்கு போதுமான வாகனங்கள் மற்றும ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால், வாடகை அடிப்படையில் TATA ACE வாகனங்களை அமர்த்திக் கொள்வதற்கு கீழ்க்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| S.No | Description of Vehicle | No.of Vehicles | Period | TATA ACE Day Rent | Driver Salary | Diesel Charges | Total Amount Per Day | Total Amount 70 days for 20 Vehicles | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TATA ACE | 20 | | | | | | | |
| | 1. PR Promoters & Transport | | 01.02.2023 to 11-04-2023 70 days | 1500 | 600 | 600 | 2700 | 3780000 | 4460400 |
| | | | | GST 18% | | | | 680400 | |
| | 2. Petchimuthu Transport | | | 1600 | 600 | 700 | 2900 | 4060000 | 4790800 |
| | | | | GST 18% | | | | 730800 | |
| | 3. Jayram Ventures | | | 1500 | 500 | 500 | 2500 | 3500000 | 4130000 |
| | | | | GST 18% | | | | 630000 | |

மேற்கண்ட அட்டவணையின்படி வரப் பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் Jayram Ventres விலைப்புள்ளி மற்ற இரண்டை விட TATA ACE வாகனத்தின் வாடகை, ஓட்டுநர் ஊதியம் மற்றும் டீசல் உள்பட நாள் ஒன்றுக்கு ரூ. 2500/- என குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி TATA ACE வாகனங்களை, அவரச

அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு 14 வாகனங்கள் 23.11.2022 முதல் 30.01.2023 வரை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதே வாடகை அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள TATA ACE 20 வாகனங்களை 01-02-2023 முதல் 11-04-2023 வரை உள்ள காலத்திறகு காலநீட்டிப்பு செய்து பயன்படுத்திக்கொள்ளவும் மற்றும் அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ. 41,30,000/-க்கு மான்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் குறிப்பிட்டவாறு, திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, முதல் நிலை சேகரமாக குப்பைகளை கையாளுவதற்கு போதுமான வாகனங்கள் மற்றும் ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால், வாடகை அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள TATA ACE 20 வாகனங்களை 01-02-2023 முதல் 11-04-2023 முடிய 70 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து பயன்படுத்திக்கொள்ளவும் மற்றும் அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.41,30,000/-க்கும் அவசர அவசியம் கருதி வேலை ஆணை வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 235 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

6. திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகப் பகுதிகளிலும் பொது சுகாதாரப் பணிகள், தூய்மை இந்தியா இயக்கத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் பணிகளில் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் இதரப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இவ்வலுவலகத்தில் இல்லை. மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு வெளிக் கொணர்வு முறையில் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் அன்னை தெரசா சுய உதவிக்குழு, மேலப்பாளையம் முகவரியில் உள்ள சங்கமானது 1975ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 14.12.2020-ல் பதிவு செய்யப்பட்டு அதற்கான ஆவண நகலினை மேற்படி சங்கம் சமர்ப்பித்துள்ளது. எனவே, இம்மாநகராட்சியில் பணிகளை மேற்கொள்வதற்கு மேற்படி அன்னை தெரசா சுய உதவிக்குழுவினை பயன்படுத்திக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, இம்மாநகராட்சியில் பணிகளை வெளிக்கொணர்வு முறையில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருப்பதால், மேற்படி அன்னை தெரசா சுய

உதவிக்குழு, மேலப்பாளையம் முகவரியில் உள்ள சங்கமானது 1975ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 14.12.2020-ல் பதிவு செய்யப்பட்டுள்ளதின்படி, மேற்படி அன்னை தெரசா சுய உதவிக்குழுவினை பயன்படுத்திக்கொள்வது குறித்து மாமன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.இ2/ 7245 /2022)

**தீர்மானம் எண்: 236 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

7. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையத்தில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைதளத்தில் 19 கடைகள் மற்றும் முதல் தளத்தில் 41 கடைகள் சேர்த்து ஆக மொத்தம் 60 கடைகள் உள்ளன. இதில் முதல் தளத்தில் கீழ்க்கண்ட விபரப்படி பெரிய அளவில் கட்டப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| Bharat Ratna Dr. MGR New Bus stand, Tirunelveli | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Modernization North Block** | | | | | | |
| **S.No** | **Description** | **Nos** | **L (m)** | **B (m)** | **Area in Sq.m** | **Area in Sq.ft** |
| | **South driway** | | | | | |
| 1 | FS1 | 1 | 23.78 | 8.83 | 209.98 | 2259 |
| 2 | FS2 | 1 | 41.40 | 8.83 | 365.56 | 3933 |
| 3 | FS3 | 1 | 23.87 | 8.83 | 210.77 | 2268 |
| | **North driway** | | | | | |
| 4 | FN1 | 1 | 23.85 | 8.83 | 210.60 | 2266 |
| 5 | FN2 | 1 | 41.30 | 8.83 | 364.68 | 3924 |
| 6 | FN3 | 1 | 23.80 | 8.85 | 210.63 | 2266 |

மேற்படி கடைகள் 08.12.2021 முதல் பலமுறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் போகாமல் நிலுவையில் உள்ளது. எனவே மேற்கண்ட பெரிய அளவுகளில் உள்ள 6 கடைகளை பயணிகள் தங்கும் அறையாக (Dormitory) மாற்றம் செய்யவும், அவ்வாறு மாற்றம் செய்வதினால் காலியாக உள்ள இதர 35 சிறிய கடைகளுக்கும் ஏலம் போக வாய்ப்புள்ளதால் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் அமைந்துள்ள பெரிய கடைகளை பயணிகள் தங்கும் அறையாக மாற்றம் செய்ய தேவையான அனைத்து வசதிகளையும் மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

**அலுவலகக்குறிப்பு:**

மேலே பொருளில் கண்டுள்ளபடி வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் அமைந்துள்ள 6 பெரிய கடைகளை பயணிகள் தங்கும் அறையாக மாற்றம் செய்ய தேவையான அனைத்து வசதிகளையும் மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(மே.பா அ1/5339/21)

**தீர்மானம் எண்: 237 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

8. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.25.5.2009ன்படி 2022-2025-ஆம் காலத்திற்கான மூன்று ஆண்டு காலத்திற்கு மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்க்கண்ட கழிப்பிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்தில் வைத்து 08.02.2023 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களில் உள்ள விளம்பர பலகைகளிலும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | மேலப்பாளையம் மண்டலம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 5 எண்ணங்கள் நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் மேலப்பாளையம் சந்தை ரவுண்டானா பேரூந்து நிறுத்தத்தின் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | | | | |
| ஆ | நடைமேடை - 1<br>நாகர்கோவில் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம் | 2.00 | 4.00 | 2.00 | 4.50 |
| உ) | நடை மேடை- 6<br>சென்னை பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம் | 0.75 | 1.50 | 0.75 | 3.00 |
| ஊ) | மேலப்பாளையம் ரவுண்டானா கார்னர் கழிப்பிடம் | 0.50 | 1.00 | 0.50 | 2.00 |

மேற்படி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் 2- உ, மற்றும் ஊ ஆகிய இனங்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

மேற்கண்ட வரிசை எண் 2 (ஆ)-வில் உள்ள நாகர்கோவில் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள நவீனக்கட்டணக் கழிப்பிடத்திற்கு ஏலத்தில் ஒருவரும், ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொண்டனர்.

**ஏல விபரம் (குறுமத் தொகை ரூ. 4,50,000/-)**

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலத் தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.M.லெட்சுமணமூர்த்தி 6/210/2 CSI சர்ச் தெரு, செய்துங்கநல்லூர் | வைப்புத்தொகை ரூ.200000/- கரூர் வைஸ்யா வங்கி DD. No. 301576 dated 06.02.2023 மற்றும் சால்வன்சி மதிப்பு ரூ.15,00,000/-க்கு சமர்ப்பித்துள்ளார். Certificate No. TN-1720220820118 dated 27.8.2022, Tuticorin District | ரூ.460501/- |

ஓப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத் தொகை ரூ. 4,50,000/-)

| வ. எண். | ஓப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஏலத் தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.சங்கர், த/பெ. சுப்பையா, 15ஏ. பட்டு பிள்ளையார் கோவில் தெரு, பாளையங்கோட்டை | வைப்புத்தொகை ரூ.200000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 491363 dated 06.02.2023 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.200000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 491362 dated 06.02.2023 | ரூ.455000/- |

மேற்படி உரிமம் தொடர்பாக வரப்பெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் திரு.M.லெட்சுமணமூர்த்தி என்பவர் ரூ.4,60,501/- என உச்ச ஏலத் தொகைக்கு கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.10501/- கூடுதலாக இருப்பதால் திரு.M.லெட்சுமணமூர்த்தி என்பவர் உச்ச ஏலத் தொகையான ரூ.460501/-ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு**

அ) பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் நாகர்கோவில் பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள நவீனக் கட்டணக் கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 08.02.2023 அன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு.M.லெட்சுமணமூர்த்தி என்பவர் ரூ.4,60,501/- என உச்ச ஏலத் தொகைக்கு கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.10501/- கூடுதலாக இருப்பதால் திரு.M.லெட்சுமணமூர்த்தி என்பவர் உச்ச ஏலத் தொகையான ரூ.460501/-

**ஐ ஏற்று, திரு.M.லெட்சுமணமூர்த்தி என்பவருக்கு உரிம ஆணை வழங்கப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.**

**(ந.க.எண் மே.பா. அ1/655/2022)**

## தீர்மானம் எண்: 238 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**9.**திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம் வார்டு எண்:25 கதவு எண்:69 தெற்குரதவீதி என்ற விலாசம் கொண்ட திரு.A.S. பாபு கந்தகுமார் என்பவரின் இடத்திற்கு பழைய வரிவிதிப்பு எண்:146/410049 க்கு 01.04.2011 முதல் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் புதிய வரிவிதிப்பு எண்:146/410105ற்கு மனுதாரர் 2021-2022 முடிய சொத்துவரி செலுத்தியுள்ளார். இந்நிலையில் மேற்படி இடத்தின் சொத்துவரி பழைய வரி விதிப்பு எண் (146/410049) ரத்து செய்யப்படாத நிலையில் அதனையும் மனுதாரர் 2017-2018 முடிய செலுத்தியுள்ளார்.அதை தற்போது 2017-2018 தேதியில் இருந்து ரத்து செய்ய கேட்டுள்ளார். அதன் அடிப்படையில் மேற்படி இடத்தின் பழைய வரிவிதிப்பு எண்:146/410049 (புதிய வரிவிதிப்பு எண்:146/025/904809)க்கு அரையாண்டு வரித்தொகை ரூ 1754/- வீதம் 2017-18 முதல் 2022-23 முடியவுள்ள மொத்த கேட்புத் தொகை ரூ 26,194-னை 01.04.2017 முதல் ரத்து செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு** :-

திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம் வார்டு எண்:25 கதவு எண்:69 தெற்கு ரதவீதி யில் உள்ள கட்டிடத்தின் பழைய சொத்துவரிவிதிப்பு எண்:146/410049 ஐ ரத்து செய்யக் கேட்டு மனு செய்துள்ளளார். மேற்படி கட்டிடம் இடிக்கப்பட்டு புதிய வரிவிதிப்பு சொத்துவரிவிதிப்பு (எண்:410105) செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தின் பழைய சொத்துவரிவிதிப்பு எண்:146/410049 ல் 2017-2018/- முதலாம் அரையாண்டு முதல் நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரித் தொகை ரூ1754/- எனவும் அரையாண்டு திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ600/- எனவும் மொத்தம் ரூ 26,194 ஐ 01.04.2017 முதல் ரத்து செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்:அ2/183/2023**

## தீர்மானம் எண்: 239 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

10. திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண்: 32 திருவனந்தபுரம் சாலையில் (பாளையங்கோட்டை பேருந்து நிலையம்) அருகில் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் (NELLAI SMART CITY) கட்டப்பட்டுவரும் சிட்டி சென்டர் (NELLAICITYCENTRE)கட்டிடத்திற்கு கீழ்க்கண்டவாறு அளவுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்த விபரத்துடன் கட்டிடத்திற்குரிய முன் ஏலம்/ முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction/ Pre Tender) வரவேற்கப்படுகிறது.

## வணிக வளாகம் நிலை -I (Elite Mall Phase-I)

| தளங்கள் | கடை விபரம் | சதுர அடி | சதுர அடி ஒன்றுக்கு |
|---|---|---|---|
| தரை தளம் | ஷோ ரூம் எண் 1 (Show Room) | 3490 சதுர அடி | ரூ120/- |
| | ஷோ ரூம் எண் 2 (Show Room) | 2430 சதுர அடி | ரூ120/- |
| | ஷோ ரூம் எண் 3 (Show Room) | 509 சதுர அடி | ரூ120/- |
| முதல் தளம் | ஷோ ரூம் எண் 1 (Show Room) | 3490 சதுர அடி | ரூ120/- |
| | ஷோ ரூம் எண் 2 (Show Room) | 2430 சதுர அடி | ரூ120/- |
| | ஷோ ரூம் எண் 3 (Show Room) | 509 சதுர அடி | ரூ100/- |
| | கியோஸ்க் எண் 1 (Kiosk) | 82 சதுர அடி | ரூ100/- |
| | கியோஸ்க் எண் 2 (Kiosk) | 100 சதுர அடி | ரூ100/- |
| | கியோஸ்க் எண் 3 (Kiosk) | 97 சதுர அடி | ரூ100/- |
| | கியோஸ்க் எண் 4 (Kiosk) | 99 சதுர அடி | ரூ100/- |
| | கியோஸ்க் எண் 5 (Kiosk) | 69 சதுர அடி | ரூ100/- |
| இரண்டாம் தளம் | ஷோ ரூம் எண் 1 (Show Room) | 3490 சதுர அடி | ரூ100/- |
| | ஷோ ரூம் எண் 2 (Show Room) | 2430 சதுர அடி | ரூ100/- |
| | ஷோ ரூம் எண் 3 (Show Room) | 509 சதுர அடி | ரூ80/- |
| | கியோஸ்க் எண் 1 (Kiosk) | 82 சதுர அடி | ரூ80/- |
| | கியோஸ்க் எண் 2 (Kiosk) | 100 சதுர அடி | ரூ80/- |
| | கியோஸ்க் எண் 3 (Kiosk) | 97 சதுர அடி | ரூ80/- |
| | கியோஸ்க் எண் 4 (Kiosk) | 99 சதுர அடி | ரூ80/- |
| | கியோஸ்க் எண் 5 (Kiosk) | 69 சதுர அடி | ரூ80/- |
| | புட் கோர்ட் (Food Court) | 2231 சதுர அடி | ரூ100/- |

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் தளம் | கடை எண் 1 | 1104 சதுர அடி | ரூ100/- |
| | கடை எண் 2 | 1311 சதுர அடி | ரூ100/- |
| | கடை எண் 3 | 509 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 1 (Stall) | 116 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 2 (Stall) | 73 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 3 (Stall) | 73 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 4 (Stall) | 73 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 5 (Stall) | 73 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 6 (Stall) | 135 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 7 (Stall) | 112 சதுர அடி | ரூ80/- |
| மூன்றாம் தளம் | ஸ்டால் எண் 8 (Stall) | 127 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 9 (Stall) | 110 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 10 (Stall) | 48 சதுர அடி | ரூ80/- |
| | ஸ்டால் எண் 11 (Stall) | 48 சதுர அடி | ரூ80/- |

முன் ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி ( Tender & Auction)விபரங்கள் மற்றும் அளவுகளுடன் கூடிய கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட விபரத்தினை மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொருளில் கண்டுள்ள மேற்கண்ட வார்டு எண்: 32 திருவனந்தபுரம் சாலை, பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் (NELLAI SMART CITY) கட்டப்பட்டு வரும் சிட்டி சென்டர் (NELLAI CITY CENTRE) கட்டிடத்திற்கு கீழ்க்கண்டவாறு அளவுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்த விபரத்துடன் கட்டிடத்திற்குரிய முன் ஏலம்/ முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction / Pre Tender) வரவேற்கப்படுகிறது. மேற்படி கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட விபரத்தினை விபரங்களை மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ1/ ந.க.எண்/968/2023

**தீர்மானம் எண்: 240 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

11. திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண்: 32 திருவனந்தபுரம் சாலையில் (பாளையங்கோட்டை பேருந்து நிலையம்) அருகில் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் (NELLAI SMART CITY) கட்டப்பட்டு வரும் சிட்டி சென்டர் (NELLAI CITY CENTRE) கட்டிடத்திற்கு கீழ்க்கண்டவாறு அளவுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்த விபரத்துடன் கட்டிடத்திற்குரிய முன் ஏலம்/ முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction / Pre Tender) வரவேற்கப்படுகிறது.

## வணிக வளாகம் நிலை -II (Shopping Mall Phase-II)

| தளங்கள் | கடை விபரம் | சதுர அடி | சதுர அடி ஒன்றுக்கு |
|---|---|---|---|
| தரை தளம் | கடை எண் 1 | 698 சதுர அடி | ரூ 100/- |
| | கடை எண் 2 | 338 சதுர அடி | ரூ 100/- |
| | கடை எண் 3 | 1074 சதுர அடி | ரூ 100/- |
| | கடை எண் 4 | 580 சதுர அடி | ரூ 100/- |
| | கடை எண் 5 | 236 சதுர அடி | ரூ 100/- |
| முதல் தளம் | கடை எண் 1 | 698 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 2 | 338 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 3 | 1074 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 4 | 580 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 5 | 236 சதுர அடி | ரூ 80/- |
| இரண்டாம் தளம் | கடை எண் 1 | 698 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 2 | 338 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 3 | 1074 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 4 | 580 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 5 | 236 சதுர அடி | ரூ 80/- |
| மூன்றாம் தளம் | கடை எண் 1 | 698 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 2 | 580 சதுர அடி | ரூ 80/- |
| | கடை எண் 3 | 236 சதுர அடி | ரூ 80/- |
| | சிறுவர் வேடிக்கை மண்டலம் (Fun Zone) | 2021 சதுர அடி | ரூ 80/- |

முன் ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி ( Tender & Auction) விபரங்கள் மற்றும் அளவுகளுடன் கூடிய கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட விபரத்தினை மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொருளில் கண்டுள்ள மேற்கண்ட வார்டு எண்: 32 திருவனந்தபுரம் சாலை, பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் (NELLAI SMART CITY) கட்டப்பட்டு வரும் சிட்டி சென்டர் (NELLAI CITY CENTRE) கட்டிடத்திற்கு கீழ்க்கண்டவாறு அளவுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்த விபரத்துடன் கட்டிடத்திற்குரிய முன் ஏலம்/ முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction / Pre Tender) வரவேற்கப்படுகிறது. மேற்படி கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட விபரத்தினை விபரங்களை மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ1/ ந.க.எண்/969/2023

**தீர்மானம் எண்: 241 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

12. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 16-க்கு உட்பட்ட அடைக்கலமாதா தெருவில் உள்ள மேல்நிநலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் சுகாதார ஆரோக்கிய மைய கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட கட்டிடத்தின் வடமேற்கு பகுதியில் கட்டிடத்தின் கூரை மேலே குறைந்த மின் அழுத்த மின் கம்பிகள் செல்கின்றது. அந்த மின்சார மின்கம்பிகளை மாற்றி அமைப்பதற்கு, மின்கம்பத்தினை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பகுதியில் உள்ள மின்கம்பத்தினை மாற்றி அமைக்க மின்சார வாரிய உத்தேச கட்டணம் ரூ.25,000 ஆகும். மேற்கண்ட செலவினம் ரூ.25,000-க்கும் மின்கபம்பத்தினை மின்வாரியம் மூலம் மாற்றி அமைக்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட அடைக்கலமாதா தெருவில் உள்ள சுகாதார ஆரோக்கிய மைய கட்டிடத்தின் மேல் செல்லும் மின்கம்பிகளை மாற்றி அமைப்பதற்கான மின்கம்பத்தினை மாற்றி அமைக்க ஆகும் செலவினம் ரூ.25,000-க்கும் மின்கம்பத்தினை மின்வாரியம் மூலம் மாற்றி அமைக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/512/2023**

## தீர்மானம் எண்:242 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

13. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 16-க்கு உட்பட்ட 1. கண்டியபேரி உழவர் சந்தைக்கு தெற்கு கீழ்புறம் வாய்ககாலுக்கு அருகில் பழமையான மிகவும் பழுதடைந்த நிலையில் ஆபத்தான நிலையில் உள்ள கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடவும், 2. சிக்கந்தர் மேற்கு பகுதியில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையிலும், மேலும் அப்பகுதியில் பெரும்பான்மையான வீடுகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடுகளில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதாலும், பொதுகழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடவும், 3. காமாட்சியம்மன் கோயில் தெருவிற்கு மேல்புறம் வாய்காலுக்கு மேற்கே உள்ள பொதுகழிப்பிடம் மிகவும் பழுதடைந்த ஆபத்தான நிலையிலும் மேலும் அப்பகுதியில் பெரும்பான்மையான வீடுகளில் (Swacch Bharath Mission) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடுகளில் கழிவறைகள் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதாலும், பொதுகழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடவும் அறிவுறுத்தியதன்படி மேற்கண்ட கட்டிடங்களை JCB

இயந்திரம் மூலம் இடித்து அப்புறப்படுத்திட உத்தேச செலவினம் ரூ.25,000/- ஆகும். மேற்கண்ட செலவினம் ரூ.25,000க்கு நிர்வாக அனுமதியும் மேற்கண்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திடவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட பொருளில் கண்ட மிகவும் பழுதடைந்த ஆபத்தான நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட ஆகும் செலவினம் ரூ.25,000-க்கு நிர்வாக அனுமதியும், இடித்து அப்புறப்படுத்தவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/516/2023**

## தீர்மானம் எண்: 243 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.